# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண். 184 /2023

### அ.சா. 1 (LW 1 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | கோபிநாத் | **தொழில்** | |
| **த/க பெயர்** | | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **15.09.2025** |

**1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.**

1 வது எதிரி ஆஜர்

<u>முதல் விசாரணை</u>

நான் பெத்தனம்பட்டியில் குடியிருக்கிறேன். வெல்டிங் வேலை செய்கிறேன். 10 ம் வகுப்பு படித்துள்ளேன். இவ்வழக்கில் இறந்து போன அழகுபாண்டி எனது நண்பர் ஆவார். இவ்வழக்கில் இறந்து போன அழகுபாண்டியும் நானும் ஒன்றாக அரவிந்தகுமாரிடம் வெல்டிங் வேலை பார்த்தோம். ஆஜர் எதிரியை தெரியாது. கடந்த 2 வருடம் முன்பு நானும் அழகுபாண்டியும் இருசக்கர வாகனத்தில் பெட்ரோல் போடுவதற்காக பழனிரோட்டிலுள்ள பூச்செண்டு பெட்ரோல் பங்கிற்கு போனோம். அவர்போன போது நான் வெளியே போய் விட்டேன்.எல்லாரும் ஓடிப் போய் பார்த்த போது அழகுபாண்டி பெட்ரோல் பங்கில் இறந்து கிடந்தார். அவரது மூக்கில் காயம் இருந்தது. அந்த இடத்தில் யாரும் இல்லை. வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்தை வெள்ளை தாளில் ஆர்எம் காலனியில் உள்ள காவல்நிலையத்தில் போட்டுக் கொடுத்தேன். அதில் என்ன எழுதியிருக்கிறது என எனக்கு தெரியாது. புகாரிலுள்ள கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.1. ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154 ன் கீழ் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நானும், எதிரியும், இறந்த அழகுபாண்டியும் மற்றும் அசோக்குமார், மகேந்திரன் ஆகியோர்கள் அரவிந்த குமார் பெட்ரோல் பங்கில் வேலை பார்த்தோம் என்றால் சரிதான். அழகுபாண்டி இறப்பதற்கு முதல் நாள் எனது ஓனர் அரவிந்தகுமாருடைய பிறந்தநாள் என்றால் சரிதான். அந்தபிறந்த நாள் விழாவில் நானும், எதிரியும், இறந்த அழகுபாண்டியும் மற்றும் அசோக்குமார், மகேந்திரன் ஆகியோர்கள் மது அருந்தி கொண்டாடினோம் என்றால் சரிதான். அந்த விழாவில் அசோக்குமாரின் தாயாரை

அழகுபாண்டி தவறாக பேசியதில் வாக்குவாதம் ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அதை காரணமாகத்தான் வைத்து அசோக்குமார், மகேந்திரன் ஆகியோர்கள் என்னை அழகுபாண்டியை கூட்டிப் போ நாங்கள் வந்து அழகுபாண்டியை என் அம்மாவை தவறாக பேசிய அழகுபாண்டியை கொலை செய்வதற்கு நீ உடன் இருக்க வேண்டும் என கூறியதாகவும் அதனால் நான் அழகுபாண்டியை TN 64 C 1132 என்ற இருசக்கர வாகனத்தில்பழனி ரோட்டில்உள்ள பூச்செண்டு பெட்ரோல் பங்கிற்கு சென்று அங்கு பெட்ரோல் போடுவதற்காக நின்று கொண்டிருந்ததாகவும் அப்போது அங்கு வந்த அசோக்குமார் மகேந்திரன் ஆகியோர்கள் அவர்கள் தயாராக வைத்திருந்த அரிவாளால் அழகுபாண்டியின் வாய்ப்பகுதி, கன்னம், மூக்கு போன்ற இடங்களில் மாறி, மாறி வெட்டியதாகவும்அழகுபாண்டி சம்பவ இடத்தில் இறந்ததை நான் பார்த்து நான் பணி செய்த முதலாளி அரவிந்த்க்கு தகவல் தெரிவித்ததாகவும் அதன் பின் நானும் அரவிந்தகுமார், திண்டுக்கல் நகர் மேற்கு காவல்நிலையம் சென்று புகார் கொடுத்ததாகவும் மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு தற்போது எதிரி என்னுடன் வேலை செய்யும் நபர் என்பதால் எதிரியை வழக்கிலிருந்து விடுவிப்பதற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.12 00:04:16 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.